கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 06.07.2026 திங்கட்கிழமை இதழ் : 181 பக்கங்கள் : 08

# சிறைக்குள் வெடித்தது மோதல்! இரண்டு கைதிகள் உயிரிழப்பு!!

## 28 பேர் வைத்தியசாலையில் அனுமதி நீர்கொழும்பில் நேற்று பெரும் களேபரம்


கொழும்பு, ஜூலை. 06

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இரண்டு கைதிகள் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த மேலும் மூன்று பேர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். 25 பேர் காயமடைந்த நிலையில் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அங்கு பெரும் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

கைதிகளின் இரு குழுக்களுக்கு இடையே நேற்று ஏற்பட்ட மோதலில்

07



## சிறை மோதல் பின்னணியில் போதைப்பொருள் விவகாரம்!

கொழும்பு, ஜூலை. 06

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நேற்று பிற்பகல் இரு கைதிகள் குழுக்களுக்கு இடையே வெடித்த மோதலுக்கு, "பூரு மூனா" என்றழைக்கப்படும் ஒரு பாதாள உலகக் கும்பல் உறுப்பினருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட சுரேஷ் என்ற போதைப்பொருள் கடத்தல்காரர் தலைமை தாங்கியதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்று தொடர்பான தகவல் சிறைச்சாலை காவலர்களுக்கு தெரியவந்த சம்பவம் தொடர்பாக இந்த மோதல் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றைய மோதலில் இதுவரை இரண்டு கைதிகள் உயிரிழந்துள்ளதாகவும், கவலைக்கிடமான நிலையில் இருந்த மேலும் இரண்டு கைதிகள் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைக் கைதிகளின் மோதலைத் தொடர்ந்து, நீர்கொழும்பு மற்றும் சுற்றியுள்ள பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகளும், விசேட அதிரடிப்படையினரும் சிறை வளாகத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

07

## தயா கமகேவின் சொத்துகள் மக்கள் வங்கியால் பறிமுதல்!

கொழும்பு, ஜூலை. 06

முன்னாள் அமைச்சர் தயா கமகேயின் பெரும்பாலான சொத்துக்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளை மக்கள் வங்கி முன்னெடுத்துள்ளது.

மக்கள் வங்கியின் பராட்டே சட்ட அதிகார வரம்பிற்குட்பட்ட அடமானச் சொத்துக்களை ஏலம் விடுவதற்கான வங்கியின் முடிவை எதிர்த்து "தயா குரூப் லிமிடெட்" மற்றும் "தயா எபரல் எக்ஸ்போர்ட்" நிறுவனங்கள் தாக்கல் செய்த ரிட் மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

குறிப்பிட்ட கடனை வசூலிக்கும்

07

## கல்விச் சீர்திருத்தம் இறுதிக்கட்டத்தில்!

கொழும்பு, ஜூலை. 06

அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது திட்டமிட்டபடி நிறைவடைந்து வருவதாக கல்வி அமைச்சரும், பிரதமருமான

07

## அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக்க போதுமான நிதி அரசாங்கத்திடம் உண்டு!

### கூறுகிறார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜூலை. 06

அரசாங்கம் அடுத்த கட்டமாக நாட்டின் உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் கவனம் செலுத்தும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்குப் பதிலளித்த அவர், பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன், நாட்டின் பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் சமூக சூழலை நிலைப்படுத்துவதற்கே அரசாங்கம் முதலிடம் கொடுத்ததாகக் கூறினார்.

அத்துடன் "மெட்ரோ பேருந்து" சேவை

07

## அரசியல் தலையீட்டுடனான ஆட்சேர்ப்புக்களுக்கு முடிவு!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஜூலை. 06

அரசியல் அரசியல் தலையீட்டுடனான ஆட்சேர்ப்புகளுக்கு முடிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, வெளிப்படைத்தன்மையுடன் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யும் முறைமை பின்பற்றப்படுவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாட்டில் இலவச சுகாதார

07

## புதிய பஸ் கட்டணங்கள் இன்று முதல் நடைமுறை

கொழும்பு, ஜூலை. 06

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிவிப்புக்கு அமைய, திருத்தப்பட்ட புதிய பேருந்து கட்டணங்கள் இன்று முதல் நாடு முழுவதும் அமுலுக்கு வரவுள்ளன.

இந்த கட்டணத் திருத்தம் இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச) மற்றும் தனியார் பஸ்கள் உட்பட குறுகிய தூர, நீண்ட தூர மற்றும் சொகுசு பஸ் சேவைகள் அனைத்துக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

07

## கருணா அம்மானிடம் சி.ஐ.டி. வாக்குமூலம்?



கொழும்பு, ஜூலை. 06

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சில விடயங்கள் குறித்து, முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) என்பவரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பெற்றுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியின்படி, பிள்ளையான் தரப்பினருக்கும் அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலேயுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் கிழக்கு மாகாணத்தில் அவர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பல தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பிள்ளையானின் குழுவினருக்கு தங்குமிட வசதிகளை வழங்கியபோது, சுரேஷ் சாலேயினால் தொடர்புபடுத்தப்பட்ட நபர்களே அந்த வசதிகளை வழங்கியதாகவும், அதற்கான நிதி வசதிகளும் அவர்களாலேயே வழங்கப்பட்டதாகவும் கருணா அம்மான் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் ஆகிய இருவருமே முன்னாள் ஜனாதிபதி மகிந்த

07

## மன்னார் ரயில் சேவை பாதிப்பு!

கொழும்பு, ஜூலை. 06

மோசமான வானிலை காரணமாக ரயில் தண்டவாளங்களில் ஏற்பட்டுள்ள தடைகள் நிமித்தம், மன்னார் மற்றும் மலையக ரயில் பாதைகளின் சில பகுதிகளில் ரயில் சேவைகள் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தண்டவாளங்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகள் காரணமாக, மன்னார் மற்றும் மதவாச்சிக்கு இடையே யான மன்னார் வழித்தட ரயில் சேவைகள் முற்றாக தடைப்பட்டுள்ளன.

அதேபோல், மலையக ரயில் பாதையில் ஏற்பட்டுள்ள தடங்கல் காரணமாக ரம்புக்கனை மற்றும் நானுஓயா ஆகிய நிலையங்களுக்கு

07

## பொருளாதார நெருக்கடிக்கு அதிகாரிகளும்கூட காரணம்!

### மத்திய வங்கி ஆளுநர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 06

இலங்கை கடந்த காலத்தில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு அரசியல்வாதிகள் மட்டுமன்றி, அதிகாரிகளும் கூட ஒருவகையில் காரணம் என்றும் மத்திய வங்கியின் கலாநிதி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, இலங்கையின் பொருளாதாரத் திவால் நிலையின் மூலக் காரணங்கள் மற்றும் அதன்

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இருண்ட அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதே எங்கள் பணி!

## பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க



கொழும்பு, ஜூலை. 06

இந்த அரசாங்கத்தின் முக்கியப் பணி என்னவென்றால், இந்த இருண்ட அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழலை மாற்றி, அனைவருக்கும் சமமான, சிறப்பாக வியாபாரம் செய்யக்கூடிய ஒரு வளர்ந்த அமைப்பை உருவாக்குவதுதான் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்ஹ தெரிவித்துள்ளார்

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உண்மையில் மக்கள் போராட்டம் செய்து எதனை எதிர்பார்த்தார்களோ அதுதான் நடக்கிறது. நமது நாடு அழிவதற்குக் காரணம் நமது நாட்டின் அரசியல் கலாச்சாரம் இது ஊழல், முறைகேடு மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. ஏனெனில், இந்த அரசியல்வாதிகள் மக்களின் முன்னேற்றத்துக்காக அரசியல் செய்யவில்லை என்பதை மக்கள் இப்போது புரிந்து கொண்டுள்ளனர்.

அவர்கள் அவ்வப்போது ஊழல் செய்து, தங்களுக்கு எதிரான வழக்குகளை மாற்றியமைக்க வழக்குகளைத் தள்ளிப்போட, அவற்றிலிருந்து தப்பிக்கவே தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தினர்.

எதிர்க்கட்சிகள் நாம் பொருளாதாரத்தைக் கையாள முடியாமல் போவோம் என்றே எதிர்பார்த்தன. ஆனால், நிலையான பொருளாதாரத்தைக் கொண்டு வந்து, இரண்டு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளதாக நாணய நிதியம் கூறியுள்ளது. இது ஒரு சிறப்பான வெற்றி

எனவே, சர்வதேச உறவுகளுடன் இணைந்து இலங்கையின் தொடர்ச்சியான வளர்ச்சி, மற்றும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வரி வருவாயைச் சேகரிப்பதில் செயல்திறன் அதிகரித்துள்ளது. மக்களுக்கு நாம் கூற விரும்புவது என்னவென்றால், இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருங்கள். இந்த செயல்முறையின் மூலம்தான் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும். செப்டம்பர் மாதத்திற்குள் மின்சாரக் கட்டணக் குறைப்பு முழுமையாக உங்களுக்குக் கிடைக்கும்.

அதேபோன்று, வரி விதிப்பு முறையைப் பொறுத்தவரை, நாம் வரி விதிப்பு முறையைச் சீரமைத்து, செயல்திறன் மிக்கதாக மாற்றுவதன் மூலம், 2027 இல் வரி விகிதங்கள் குறையும் என்று எதிர்பார்க்கலாம். அதற்காகவே அரசாங்கம் தற்போது தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது-என்றார். (அ)

# வரியை உயர்த்தி விவசாயிகளை நடுத்தெருவில் விட்டுள்ளது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை. 06

76 வருடங்களாக இந்நாட்டின் அரசாங்கங்கள் செய்த அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்களின் மூலம் கிடைத்த வருமானத்திற்கு, வரிகளை அதிகரித்துத்தான் இந்த அரசாங்கம் ஆட்சி செய்கிறது. என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர். ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நாட்டின் சட்டத்தின் சுதந்திரம் மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பாக கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டில் இருந்த ஒவ்வொரு தலைவரும் சட்டத்தின் சுதந்திரத்தில் கைவைக்கவில்லை என்பதை நாம் அறிவோம். அவ்வாறு தலையிட்டவர்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது.

அரசாங்கம், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல், மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக மாறும்போது, நீதித்துறையில் அரசியல் தலையீடுகளைச் செய்ய முயற்சிக்கிறது. இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளைத் தங்கள் விருப்பப்படி செய்து, இந்த நாட்டின் ஆட்சியைத் தங்களுக்குச் சாதகமாக முன்னெடுத்துச் செல்ல முயல்கிறார்கள். இந்த நாட்டின் சட்டத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறோம். எங்களால் செய்யக்கூடிய அனைத்தையும் நாங்கள் செய்வோம்.

தனிநபர் வருமானம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி கூறுகிறது. ஆனால், தனிநபர் வருமானத்தைப் போலவே, தனிநபர் செலவுகளும் அதிகரித்துள்ளன என்பதுதான் இங்குள்ள பிரச்னை. இலங்கை தற்போது நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாறியுள்ளதாகக் கூறுகிறார்கள். நான் கேட்கிறேன், இந்த வருமானத்தைப் பெறுவதற்காக அரசாங்கம் என்ன மாதிரியான அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டுவந்துள்ளது? ஏதேனும் ஒரு தொழிற்சாலையை உருவாக்கியுள்ளதா? ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தையாவது செய்துள்ளதா? அல்லது ஒரு பல்கலைக்கழகத்தையாவது உருவாக்கியுள்ளதா?

நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு மேம்படுத்தப்பட்டுள்ளது? 76 வருடங்களாக இந்நாட்டின் அரசாங்கங்கள் செய்த அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்களின் மூலம் கிடைத்த வருமானத்துக்கு, வரிகளை அதிகரித்துத்தான் இந்த அரசாங்கம் ஆட்சி செய்கிறது. இந்த அரசாங்கத்தை ஒரு "வரி அறவிடும் அரசாங்கம்" என்றுதான் நாம் அழைக்கவேண்டும்.

விவசாயிகளின் நிலைமை இன்னும் மோசமாகியுள்ளது. விவசாயிகளுக்கு உரம் மற்றும் மருந்துகளின் விலைகள் அதிகரித்துள்ளன. டிராக்டர் கட்டணங்கள் அதிகரித்துள்ளன, ஆனால் நெல்லுக்கான விலை குறைந்துள்ளது. ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்ய 130 ரூபாய் செலவாகிறது என்று அரசாங்கத்தின் அமைச்சரே கூறுகிறார். ஆனால், விவசாயிகள் தங்கள் நெல்லை 85, 80, 90 ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் விவசாயிகள் பெரும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள் -என்றார். (அ)

# டெங்கு ஆபத்து பகுதிகளை அறிவிக்கப் புதிய இலக்கம்!

கொழும்பு, ஜூலை. 06

நாட்டில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அறிவிக்க புதிய அவசர தொலைபேசி சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் மேலதிக செயலாளர் தெரிவிக்கையில்-

மக்கள் தங்கள் பகுதிகளில் பயன்படுத்தப்படாத நீர் தேங்கும் பாத்திரங்கள், கழிவுகள், பழைய ரயர்கள் போன்றவற்றில் டெங்கு நுளம்புகள் பெருகும் வாய்ப்பு உள்ள இடங்களை அடையாளம் கண்டால், உடனடியாக டெங்கு நிவாரண மையத்திற்கு தகவல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக டெங்கு நிவாரண மையத்தின் அவசர தொலைபேசி இலக்கம் 011 796 6366 பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் காணப்படும் ஆபத்தான இடங்களை அறிவிக்க முடியும்.

பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு சுகாதார அதிகாரிகள் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு குழுக்கள் அனுப்பப்பட்டு, உடனடி சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார்.

டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த அரசு, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சுகாதாரத் துறைகள் இணைந்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், பொதுமக்களின் ஒத்துழைப்பு இவ்விடயத்தில் மிக முக்கியமானதாகும் என்றும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# 59 ஆயிரத்தை தாண்டிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை!

கொழும்பு, ஜூலை. 06

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 59 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு வெளியிட்டுள்ள தகவலின்படி, இதுவரை மொத்தமாக 59,638 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதில், கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் 21,546 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, ஜூலை மாதத்தின் முதல் நான்கு நாட்களில் மட்டும் 4,251 புதிய டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாகாண வாரியாகப் பார்க்கையில், மேல் மாகாணத்திலேயே அதிகபட்சமாக 31,249 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். தொடர்ந்து, தென் மாகாணத்தில் 9,507 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 5,172 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த, வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தேங்கியுள்ள நீரை அகற்றுதல், நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை சுத்தம் செய்தல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# நெடுங்கேணி பொதுச்சந்தையில் கடைகள் உடைக்கப்பட்டு திருட்டு!

வவுனியா, ஜூலை. 06

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பொதுச்சந்தையில் உள்ள பல கடைகள் நேற்று முன் தினம் நள்ளிரவு உடைக்கப்பட்டு, பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் வழமை போல் வியாபார நடவடிக்கைகளை நிறைவு செய்து கடைகளைப் பூட்டிச் சென்ற வர்த்தகர்கள் நேற்றுக் காலை சந்தைக்கு வந்தபோது பல கடைகளின் பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந் தனர்.

பலசரக்குக் கடைகள், மரக்கறிக் கடைகள் மற்றும் பழக்கடைகளுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள், அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்களையும் கல்லாவில் வைக்கப்பட்டிருந்த பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தடயவியல் ஆதாரங்களைச் சேகரித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும்!

கொழும்பு, ஜூலை. 06

அஸ்வெசும நலத்திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கையை 2028ஆம் ஆண்டு இறுதிக்குள் படிப்படியாகக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, 2027ஆம் ஆண்டில் மேலும் 4 லட்சம் குடும்பங்கள் அஸ்வெசும திட்டத்திலிருந்து நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

குடும்ப வருமானம் உள்ளிட்ட 21 அளவுகோல்களின் அடிப்படையில் பயனாளிகள் வகைப்படுத்தப்பட் டுள்ளதாகவும், தகுதியற்றவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, 2028ஆம் ஆண்டு இறுதிக்குள் மிகவும் ஏழ்மையான குடும்பங்கள் மட்டுமே அஸ்வெசும நலத்திட்டத்தின் பயனாளிகளாக எஞ்சுவார்கள் என்றும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

எனினும், பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திலிருந்து பல குடும்பங்கள் இன்னும் முழுமையாக மீளாத நிலையில், நாணய நிதிய இலக்குகளை நிறைவேற்றும் நோக்கில் மட்டும் பயனாளிகளை நீக்குவது பாதிப்பை ஏற்படுத்தும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu 06.07.2026 திங்கட்கிழமை ஈழநாடு

பராபவ வருடம், ஆனி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அமெரிக்காவின் 250வது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள்

அமெரிக்கா அதன் 250வது சுதந்திர தினத்தை (ஜூலை 4) வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறது. சர்வதேச அரங்கில் மிகவும் பதற்றம் நிறைந்ததாக இருக்கும் ஒரு தருணத்தில் உலகின் மிகவும் பலம்பொருந்திய வல்லரசின் சுதந்திர தினம் வெறுமனே ஒரு தேசியக் கொண்டாட்டமாக அல்ல, பல்துருவ உலக ஒழுங்கில் அமெரிக்காவின் மாறிவரும் பங்கைப் பிரதிபலிக்கும் ஒரு சிக்கலான நிகழ்வாகவும் மாறியிருக்கிறது.

நியூயோர்க் துறைமுகத்தில் 60 கப்பல்கள் பங்கேற்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க சர்வதேச கடற்படை அணிவகுப்பு, ரைம்ஸ் சதுக்கத்தில் இடம்பெறும் பகல்நேரப் பந்து இறங்கும் (Ball drop) பிரத்தியேக நிகழ்வு என்று உள்நாட்டில் பிரமாண்டமான பொதுக் கொண்டாட்டங்கள் அரங்கேறினாலும், உலகளாவிய புவிசார் அரசியல் மோதல்கள் மற்றும் தீவிர போட்டாபோட்டி ஆகியவை இதன் பின்னணியில் நிழலாடுகின்றன.

தேசிய நிகழ்வுகளை அமெரிக்கர்கள் தங்களது நாட்டின் “தனித்துவத்தை” வலியுறுத்தி ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உரைகளுடன் நடத்துகிறார்கள். சர்வதேச அரங்கைப் பொறுத்தவரை, அமெரிக்காவின் இன்றைய வெளியுறவுக் கொள்கையின் விளைவான எதிர்மறையான நிகழ்வுப் போக்குகளே முக்கிய கலனத்துக்கு உரியவையாக இருக்கின்றன.

“மனிதர்கள் அனைவருக்கும் வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் மகிழ்ச்சியைத் தேடுவதற்கும் மறுக்க முடியாத உரிமைகள் உள்ளன” என்ற பிரகடனமே அமெரிக்க அரசியலமைப்பின் அடிப்படை வரிகள். கடந்த இரண்டரை நூற்றாண்டுகளாக அந்த பிரகடனத்தின் பிரகாரம் அமெரிக்கா எந்தளவுக்கு நடைமுறையில் செயற்பட்டிருக்கிறது என்பது இன்றைய தருணத்தில் முக்கியமான ஒரு கேள்வி.

அமெரிக்கா அதன் 200வது சுதந்திர தினத்தை 1976 ஆம் ஆண்டில் கொண்டாடியபோது உலகம் இருதுருவ பனிப்போரில் (Cold War) சிக்கியிருந்தது. ஆனால், இன்று 250 வது சுதந்திர தினத்தை அமெரிக்கா கொண்டாடும்போது ஆழமான மூலோபாயச் சவால்களுக்கு முகங்கொடுப்பதுடன் உலக நாடுகளின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது.

250 வது சுதந்திர தினத்தை அமெரிக்கா இன்று கொண்டாடும்போது அதன் நேச நாடுகினால் கூட சந்தேகத்துடன் பார்க்கப்படுகிறது. சர்வதேச சட்டங்களைப் பற்றி தனக்கு கவலை கிடையாது என்றும் இன்றைய சர்வதேச ஒழுங்கு (இரண்டாவது உலகப் போரின் முடிவுக்குப் பின்னர் அமெரிக்காவே முன்னரங்கத்தில் நின்று அமைத்த ஐக்கிய நாடுகள் சபையை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கு) அமெரிக்காவுக்கு ஒரு அநாவசியமான சுமையாக இருக்கிறது என்றும் கூறுகின்ற ஒரு ஜனாதிபதியின் நிருவாகத்தின் கீழ் இன்று அமெரிக்கா இருக்கிறது.

சர்வதேச சட்டங்களை மதிக்க வேண்டும் என்ற எந்தவிதமான அக்கறையுமின்றி வெறுமனே கொடுக்கல் வாங்கல்களையும் (Transactional policy) மற்றைய நாடுகளின் இறைமையை மதிக்காத இராணுவ ஆக்கிரமிப்பையும் அடிப்படையாகக் கொண்ட வெளியுறவுக் கொள்கை மூலமாக அமெரிக்கா தன்னைச் சுருக்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அது 250வது சுதந்திர தினம் என்ற மைல்கல்லைக் கடக்கிறது.

# தமிழக முதல்வர் விஜய்யின் முதல் சில வார ஆட்சி; முன்னாள் முந்தையவர்களுடன் ஒரு ஒப்பீடு




தமிழகத்தில் ஒரு புதிய முதலமைச்சர் பதவியேற்கும்போது, மாநிலத்தின் அரசியல் ஆளுமைகளுடன் அவரை ஒப்பிடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அதிர்வலைகளை ஏற்படுத்திய 2026 சட்டசபை தேர்தல் வெற்றியின் மூலம், கிட்டத்தட்ட ஆறு தசாப்தகால திராவிடக் கட்சிகளின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, ஒரு புதிய அரசியல் சகாப்தத்தை தோற்றுவித்திருக்கும் முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் விடயத்தில் இது மிகவும் உண்மையானதாகும்.

பதவியேற்று வெறும் இரண்டு மாதங்களே ஆகியுள்ள நிலையில், விஜய் ஏற்கனவே ஒரு தனித்துவமான நிர்வாகப் பாணியை உருவாக்கத் தொடங்கியுள்ளார். அவரது நீண்டகால சாதனைகளை மதிப்பிடுவதற்கு இது மிக ஆரம்பக் கட்டம் என்றாலும், சென்னை செயின்ட் ஜோர்ஜ் கோட்டையிலிருந்து வெளிவரும் சமிக்ஞைகள், கடந்த காலத்திலிருந்து சில நல்ல விடயங்களைத் தேர்ந்தெடுத்து, அதே வேளையில் ஒரு புதிய அரசியல் அடையாளத்தை உருவாக்க முயலும் ஒரு தலைமைத்துவ மாதிரியை வெளிப்படுத்துகின்றன.

தேர்தல் வாக்குறுதிகளை அரசாங்க நடவடிக்கைகளாக மாற்றுவதற்கு விஜய் மிக வேகமாகச் செயல்பட்டார். பதவியேற்ற சில மணி நேரங்களிலேயே, உள்நாட்டு நுகர்வோருக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கு அவர் ஒப்புதல் அளித்தார். இத்திட்டத்தின் மூலம் சுமார் 2.4 கோடி குடும்பங்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், போதைப்பொருள் கடத்தல் மற்றும் துஷ்பிரயோகத்தை ஒடுக்குவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் தனது நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கும் “போதைப்பொருள் எதிர்ப்பு சிறப்புப் படைகளை” (Anti-Drug Task Forces) அவர் தொடங்கினார்.

பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கும், புகார்கள் மீது விரைவான விசாரணை மற்றும் தீர்வு காண்பதை உறுதி செய்வதற்கும் “சிங்கப் பெண் சிறப்புப் படை”யை (Singappen Special Task Force) அரசாங்கம் உருவாக்கியது.

பதவியேற்ற 48 மணி நேரத்திற்குள், வழிபா ட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் இருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள 717 தமிழ்நாடு மாநில வாணிபக் கழக (டாஸ்மாக்) மதுபானக் கடைகளை மூட விஜய் உத்தரவிட்டார். இந்த நடவடிக்கையின் மூலம் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் இருந்த 276 கடைகளும், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் இருந்த 186 கடைகளும், பேருந்து நிலையங்களுக்கு அருகில் இருந்த 255 கடைகளும் மூடப்பட் டன. இதன் மூலம் தனது முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை அவர் நிறைவேற்றினார்.

மேலும், அம்மா உணவகங்களை நவீனமயமாக்குதல், நலிவடைந்த கடனாளிகளுக்கு கூட்டுறவு வங்கித் கடன் தள்ளுபடி, முடங்கிக் கிடந்த ஜல் ஜீவன் மிஷன் குடிநீர் திட்டங்களுக்குப் புத்துயிர் அளித்தல், நெல் சாகுபடிக்காக 134.83 கோடி ரூபா மதிப்பிலான தொகுப்புத் திட்டம், கூடுதல் அவசரக்கால வாகனங்கள் மூலம் கிராமப்புற சுகாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் தாய்மார்கள் நலச் சேவைகளை மேம்படுத்த ஸ்கேன் மையங்களை தீவிரமாகக் கண்காணித்தல் ஆகிய பணிகளையும் அரசாங்கம் தொடங்கியுள்ளது.

நிர்வாக ரீதியாக, விஜய் 436 அம்சங்களைக் கொண்ட “வெற்றித் தமிழகம் தொலைநோக்கு ஆவணத்தை” வெளியிட்டார், மாநில நிதியாதாரம் குறித்த “வெள்ளையறிக்கை”யை சமர்ப்பித்தார், முதலீட்டாளர்களுக்கு உகந்த ஒற்றைச் சாளர அனுமதிகளை விரிவுபடுத்தி னார், கடுமையான ஊழல் எதிர்ப்பு நடவடிக் கைகளுக்கு உத்தரவிட்டார், மேலும் குடிமக்கள் சலுகை அட்டை (Citizen Privilege Card), அரசின் சூப்பர் ஆப் (Super App), சேவைகள் உரிமைச் சட்டம் மற்றும் பொது நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவின் (AI) பரவலான பயன்பாடு ஆகியவற்றிற்கான திட்டங்களை அறிவித்தார்.

இவரது நிர்வாகத்தில் முதன்மையாகக் கவனிக்கத்தக்க அம்சம், நிர்வாக ஒழுக்கத்திற்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவமாகும். அரசு அலுவலகங்கள் வேலை நேரங்களில் திறம்பட ச் செயல்பட வேண்டும் மற்றும் அமைச்சர் கள் பொதுமக்களால் எளிதில் அணுகக்கூடிய வர்களாக இருக்க வேண்டும் என்பதில் அவர் காட்டும் உறுதி, 1950-கள் மற்றும் 1960-களின் முற்பகுதியில் பள்ளிகள், வீதிகள் மற்றும் பொதுப் பணிகளில் இடைவிடாத கவனம் செலுத்தி பழைய மெட்ராஸ் மாநி லத்தை மாற்றியமைத்த காமராஜரின் எளிய வாழ்க்கை முறை மற்றும் நிர்வாகத் திறனை நினைவூட்டுகிறது.

இருப்பினும், காங்கிரஸ்காரரான காமராஜருக்குப் பின் வந்த வலிமைமிக்க திராவிடத் தலைவர்களின் பாணியிலிருந்து விஜய்யின் பாணி கணிசமாக வேறுபடுகிறது. சி.என். அண்ணாதுரை தனது சொற்பொழிவு, சமூக நீதி மற்றும் தமிழ் அடையாளத்தின் மூலம் தனது புகழைக் கட்டமைத்தார். முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதி, தனது இலக்கியத் திறமையுடன், கூட்டணிக் கட்டமைப்பு மற்றும் நலத்திட்ட அரசியலை இணைத்து, கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களாக ஐந்து முறை முதலமைச்சராகப் பணியாற்றினார்.

இவற்றில் இருந்து விஜய் வேறுபடுகிறார்.

(எஸ். வெங்கட் நாராயண், த ஐலண்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**இடபம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மிதுனம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசி செயல்படுவீர்கள். புண்ணிய் ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். அலுவலகத்தில் நிம்மதி உண்டாகும். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். பணப் பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சாங்களை உணர்வார்கள்.

**துலாம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் ஒரு புதிய சாதனையைப் படைப்பீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூட்சுமங்களை உணர்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டும். மறதியால் பிரச்னை வரக்கூடும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# மன்னாரில் சுகாதாரக் குறைபாடுகளுடன இயங்கிய உணவகம் மீது சட்ட நடவடிக்கை

மன்னார், ஜூலை. 06

மன்னார் நகரில் இயங்கி வந்த பிரபல உணவகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுகாதாரப் பரிசோதனையில் கடுமையான சுகாதாரக் குறைபாடுகள் கண்டறியப்பட்டதைத்தொடர்ந்து, அந்த உணவகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மன்னார் நகர சபை மற்றும் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட சோதனையின் போது, உணவகத்தின் சுகாதாரமற்ற செயற்பாடுகள் தெரிய வந்தன.

பரிசோதனையில், ஈக்கள் மொய்க்கும் அசுத்தமான சூழலில் உணவு தயாரிக்கப்பட்டமை, கெட்டுப்போன காய்கறிகள் பயன்படுத்தப்பட்டமை, கோழிக் கழிவுகளால் அசுத்தமடைந்த முட்டைகள் உணவு தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு பாரிய குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

மேலும், சமைத்த மற்றும் சமைக்காத உணவுகள் அசுத்தமான குளிர்சாதனப் பெட்டியில் ஒன்றாக சேமித்து வைக்கப்பட்டிருந்ததுடன், சூடான உணவுகளை தயாரிக்கவும் பரிமாறவும் அபாயகரமான பிளாஸ்ரிக் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், உணவக ஊழியர்கள் உரிய மருத்துவச் சான்றிதழ்கள் இன்றி உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்ததுடன், குப்பைத் தொட்டிகள்

மூடிகளின்றி சுகாதாரமற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்ததும் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, உணவகத்தில் இருந்த சுகாதாரமற்ற உணவுப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் உடனடியாக தடை விதித்ததுடன், அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

மேலும், சுகாதார விதிமுறைகளை மீறிய குறித்த உணவகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க சுகாதார அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

(அ)

# பாதுகாவலன் ஆசிரியரின் யூபிலி விழா!

யாழ்ப்பாணம், ஜூலை. 06

யாழ். மறைமாவட்ட குருவும் புனித வளனார் கத்தோலிக்க அச்சக முகாமையாளரும் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியருமான அருட்தந்தை செபஸ்தியாம்பிள்ளை எயின்சிலி றொசான் அடிகளாரின் குருத்துவ யூபிலி விழா நேற்று முன் தினம் சனிக்கிழமை ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி அன்னை ஆலயத்தில் நடைபெற்றது.



ஆனைக்கோட்டை பங்குத்தந்தை அருட்தந்தை ஜேசுரட்ணம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அருட்தந்தை எயின்சிலி றொசான் தலைமையில் நன்றித்திருப்பலியும் திருப்பலி நிறைவில் அருட்தந்தைக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து அருட்தந்தையின் குருத்துவ யூபிலி தினத்தை நினைவு கூர்ந்து பங்குமக்களால் "ஆனையூர் அருள் மகன்" வெள்ளிவிழா மலரும் பாதுகாவலன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஆசிரியர் தலையங்கங்களை தாங்கிய "உண்மையின் உரைகல்" தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, ஓய்வுநிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை தமிழ்நேசன், குருக்கள், துறவிகள், இறைமக்கள், அருட்தந்தையின் குடும்ப உறவினர்களென பலரும் கலந்துகொண்டனர்.

(அ)


# சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி யாழில் நேற்று மோ.சைக்கிள் பேரணி

யாழ்ப்பாணம், ஜூலை. 06

104வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இன்று மோட்டார் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பேரணி, சாவகச்சேரியில் ஆரம்பமாகி வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து கூட்டுறவு கொடி ஏற்றப்பட்டதுடன், நிகழ்வின் தலைவர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன.



யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் பி.கேசவதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கூட்டுறவாளர்கள், பணியாளர்கள், வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(அ)

# அக்கிராஜ மன்னன் சிலைக்கு அஞ்சலி!

கிளிநொச்சி, ஜூலை. 06

கிளிநொச்சி - அக்கராயன் பகுதியில் அமைந்துள்ள அக்கிராஜ மன்னன் சிலைக்கு நேற்று கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜீவராஜா, முன்னாள் சபை உறுப்பினர்கள் மரியாதை செலுத்தி சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

ஈழத்தில் 13ஆம் நூற்றாண்டில் அக்கராயன் பிரதேசத்தை ஆட்சி செய்ததாகக் கருதப்படும் குறுநில மன்னன் அக்கிராஜனை நினைவுகூரும் வகையில், அவரது சிலை 2018ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி கிளிநொச்சி அக்கராயன் அம்பலப்பெருமாள் சந்தியில் திறந்து வைக்கப்பட்டது. அந்த நினைவு நாளை முன்னிட்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

# கீரிமலை நகுலேஸ்வரத்தில் நான்கு கிலோ வெள்ளி திருட்டு!

## இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூலை. 06

கீரிமலை - நகுலேஸ்வரத்தில் நேற்று முன் தினம் இரவு 4 கிலோ வெள்ளி களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பஸ் கட்டண திருத்தத்தில் பல்வேறு முரண்பாடுகள்!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 06

முன்மொழியப்பட்டுள்ள வருடாந்த பஸ் கட்டணத் திருத்தத்தில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் பஸ் கட்டணங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையை வேண்டுமென்றே தவிர்த்துள்ளதாக அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குறுகிய தூர சேவை பஸ்களும், சுமார் 3 ஆயிரம் நீண்ட தூர சேவை பஸ்களும் இயக்கப்படுகின்றன. எனினும், இவ்விரு சேவைகளுக்கும் தனித்தனியான கட்டண முறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதால், பயணிகள் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் டீசல் விலை மேலும் குறைந்தால், குறுகிய தூர சேவைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள 12 வீத கட்டணத் திருத்தத்தின் நிலை என்னவாகும் என்ற கேள்வியும் எழுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டீசல் விலை குறைந்தாலும், எதிர்காலத்தில் குறுகிய தூர பஸ் கட்டணங்களை குறைப்பது சாத்தியமற்ற நிலை உருவாகும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையில், வருடாந்த பஸ் கட்டணத் திருத்தத்தின் கீழ், நீண்ட தூர சேவைகளுக்கு 20 வீத கட்டண உயர்வை வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த தீர்மானம் எதிர்காலத்தில் பஸ் போக்குவரத்து துறையை கடுமையான நெருக்கடிக்குள் தள்ளும் என கெமுனு விஜேரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, புதிய பஸ் கட்டணத் திருத்தம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இராணுவத்தின் உதவியுடன் நேற்று முக்கிய இடங்களில் டெங்கு ஒழிப்பு

கொழும்பு, ஜூலை. 06

இராணுவத்தின் உதவியுடன் முக்கிய இடங்களில் டெங்கு ஒழிப்புத் திட்டம் நேற்று நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கமைய, இதன் பிரதான வேலைத்திட்டம் நேற்றுக் காலை கடுவலை நகரில் நடைபெற்றது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் சுத்தம் செய்யப்பட்ட இடங்கள் முற்றிலும் துப்புரவற்றுப் போய், மீண்டும் அவ்விடங்களை சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை வருத்தத்திற்குரிய விடயமாகும் என கடுவெல மாநகர சபையின் முதல்வர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அடையாளம் காணப்பட்ட 23 அபாயகரமான வலயங்களில் இன்று முதல் இலங்கை இராணுவத்தினரை ஒருங்கிணைத்த கூட்டுப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடுவலை தேர்தல் தொகுதியில் 57 பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் இன்று கடுவலை பஸ் நிலையப் பகுதி மற்றும் பத்தரமுல்லை ஆகிய இடங்களை பிரதானமாகக் கொண்டு, இராணுவ அதிகாரிகள் பெரும் எண்ணிக்கையில் தாமாக முன்வந்து, இந்த டெங்கு அபாயத்தில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக இந்தத் தன்னார்வப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக வர்த்தக சங்கங்கள், வெகுஜன அமைப்புகள் மற்றும் பல்வேறு தனிநபர்கள் என அனைவரும் இந்த வேலைத்திட்டத்தில் கைகோர்த்துள்ளனர்- என்றார். (அ)

# இணையவழி கையடக்கத் தொலைபேசி வியாபார மோசடிகள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 06

இணையவழி ஊடாக மேற்கொள்ளப்படும் கையடக்கத் தொலைபேசி விற்பனை மோசடிகளில் சிக்கி பணத்தை இழக்க வேண்டாம் என இலங்கைப் பொலிஸ் பொதுமக்களை எச்சரித்துள்ளது.

விற்பனைக்குரிய பொருள் உங்களது கைகளுக்குக் கிடைக்கும் வரை, அறிமுகமில்லாத நபர்களின் வங்கிக் கணக்குகளுக்குப் பணத்தை வைப்பிலிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

தங்களது பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பது தத்தமது பொறுப்பாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள பொலிஸ், இவ்வாறான மோசடிக்காரர்களிடம் சிக்கி ஏமாறாமல் இருப்பதற்கு, பொருள் கிடைத்த பின்னர் பணத்தைச் செலுத்தும் முறையை மாத்திரம் பயன்படுத்துமாறு மேலும் அறிவுறுத்தியுள்ளது.

# டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த 6 முன்மொழிவுகள் முன்வைப்பு!

கொழும்பு, ஜூலை. 06

நாட்டில் டெங்கு பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக 6 முக்கிய முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனை முன்வைத்துள்ளார்.

அதற்கமைய, பூச்சியியல் அதிகாரிகளுக்குத் தேவையான போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உடனடியாக மேம்படுத்த வேண்டும் என்றும், களப் பணிகளை திறம்பட முன்னெடுக்க அவர்களுக்கு தேவையான சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

2007 ஆம் ஆண்டின் நுளம்பினால் பரவும் நோய்த்தடுப்புச் சட்டத்தை தற்போதைய சூழலுக்கு ஏற்ற வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அதேநேரம், டெங்கு ஒழிப்புப் பணிகளில் அரசியல் தலையீடுகள் இன்றி, அறிவியல் அடிப்படையில் சுயாதீனமாக செயற்பட அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

அநுராதபுரம், குருநாகல், மாத்தளை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிகரித்துள்ளதால், சமய விழாக்களை முன்னிட்டு விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

டெங்கு ஒழிப்பிற்குத் தேவையான சர்வதேச தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளைப் பெற எதிர்க்கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூச்சியியல் துறையில் நிலவும் பணியாளர் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

# வரி வலையில் சிக்கியுள்ள பங்குச் சந்தை வருமானம்!

கொழும்பு, ஜூலை. 06

இலங்கையின் வரி விதிப்புக் கொள்கைகளில் மேற்கொள்ளப்படவுள்ள அதிரடி மாற்றங்கள் காரணமாக, எதிர்காலத்தில் பங்குச் சந்தை மூலமான வருமானத்திற்கும் வரி அறவிடும் முறைமை உருவாக்கப்படலாம் என வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசகர் ஏ.ஜி.எஸ். சுவாமிநாதன் சர்மா தெரிவித்துள்ளார்.

அண்டை நாடான இந்தியாவில் பங்குச் சந்தை முதலீடுகள் மற்றும் லாபங்களுக்கு வரி விதிக்கப்படுகின்றது. ஆனால் இலங்கையில் தற்போது வரி விதிக்கப்படாத ஒரே ஒரு வருமானமாக பங்குச் சந்தை மாத்திரமே காணப்படுகின்றது.

இதனால் பங்குச் சந்தை ஊடாக வருமானம் ஈட்டும் அதிகமானோர் வரி செலுத்தாமல் தப்பித்துக்கொள்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் அரசாங்கத்தின் வரிச் சுமை அதிகரிக்கும் பட்சத்தில், இந்தியாவில் நடைமுறையில் உள்ளது போன்று பங்குச் சந்தைக்கும் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாம். அவ்வாறு பங்குச் சந்தையில் வரி மாற்றங்கள் கொண்டு வரப்படுமாக இருந்தால், அது அரசாங்கத்திற்கு மிகப்பெரிய அளவிலான வருமான முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆயுர்வேத வைத்தியசாலைகளின் சேவைகள் டிஜிற்றல் மயமாகின்றன!

## கிழக்கு மாகாணத்தில் "ஈ ஆயுர்வேதிக்" செயலி அறிமுகம்




அம்பாறை, ஜூலை. 06

அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்திற்கு அமைவாக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் சேவைகளை "ஈ ஆயுர்வேதிக்" எனும் செயலி மூலமாக டிஜிற்றல் மயப்படுத்தி வருகிறது.

மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் சேவைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் இத்திட்டம், அம்பாறை மாவட்ட வைத்தியசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

குறித்த திட்டத்தின் கீழ், கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு கணினிகள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் டொக்டர் யூ.எல்.நிகாயா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல் பிரதம அதிதியாகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இதன்போது, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டொக்டர் பாலமுரளியினால் "ஈ ஆயுர்வேதிக்" செயலியின் தொழிற்பாடுகள் மற்றும் அதன் மூலமாக மக்களுக்குக் கிடைக்கவுள்ள நன்மைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

(அ)

# நோர்வூட் தமிழ் ம.வியின் 49ஆம் வருட கல்லூரி தினம்

ஹற்றன், ஜூலை. 06

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தின் 49ஆவது வருட கல்லூரி தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலையில் அதிபர் பி. முத்துலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவுக்கு பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஹற்றன் வலயக் கல்வி பணிமனையின் உதவி பணிப்பாளருமான டி.நாகராஜ் பிரதம அதிதியாக கலந்துக் கொண்டார்.

அதிதிகள் ஊர்வலமாக பாடசாலையின் பிரதான மண்டபத்தை அழைத்து வரப்பட்டதையடுத்து மங்கள குத்து விளக்கு ஏற்றல் இடம் பெற்றது.

அதனையடுத்து, மாணவர்களின் பல கலை, கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதன் பின்னர் பிரதம அதிதி டி.நாகராஜ், ஹற்றன் வலயக் கல்விப் பணிப்பாளர் எ.சுமதி ஆகியோரினால் மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு ஹற்றன் வலயக்கல்வி பணிமனையின் பிரதி மற்றும் உதவி கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச அதிபர்கள், முன்னாள் அதிபர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் என அதிகளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

(அ)

# பொன் அணிகளின் சமரில் சிவானந்தா வெற்றிவாகை!




மட்டக்களப்பு, ஜூலை. 06

கிழக்கு மாகாணத்தின் முன்னணி பாடசாலைகளான திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திற்கும் இடையிலான 31 ஆவது வருட பொன் அணிகளின் சமர் கிரிக்கெட் போட்டியில் சிவானந்தா அணி வெற்றிவாகை சூடி இந்த ஆண்டுக்கான சாம்பியன் பொன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

இப் போட்டி திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

திருமலை கோணேஸ்வரா அதிபர் மகேந்திரராஜா பிரகாஷ் வழிகாட்டலில் அணித் தலைவர் கஜேந்திரன் கார்த்திகேயன் சக வீரர்களுடன் களமிறங்கினார்.

மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா அதிபர் சபாபதிப்பிள்ளை தயாபரனின் வழிகாட்டலில் அணித் தலைவர் தயாபரன் கவிஷன் சக வீரர்களுடன் களமிறங்கினார்.

பிரதம அதிதியாக கல்விஅமைச்சின் உயர்கல்வி, தொழில்துறைக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.எல்.குணதிலக கலந்து சிறப்பித்தார்.

போட்டியில் முதலாவது துடுப்பெடுத்தாடிய சிவானந்தா அணி 50 ஓவரில் 09 விக்கட் இழப்புக்கு 247 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோணேஸ்வரா அணி 50ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து ஆக 215 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

எனவே, 32 ஓட்டங்களால் சிவானந்தா அணி வெற்றி பெற்றது.

கடந்த 30 வருடங்களில் திருகோணமலை மட்டக்களப்பு என இரு இடங்களிலும் மாறிமாறி நடைபெற்ற போட்டிகளில் இரு அணிகளும் தலா 15 போட்டிகளில் வெற்றி பெற்று சமநிலையில் இருந்தன.

31 ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றதில் சிவானந்தா அணி வெற்றி பெற்றதன் வாயிலாக 16 வெற்றிகளை பெற்று சமரில் முன்னணியில் திகழ்கிறது.

(அ)

# சித்தானைக்குட்டி சுவாமி சித்தர் ரதபவனி



காரைதீவு, ஜூலை. 06

காரைதீவு சித்தானைக்குட்டி சுவாமியின் 75ஆவது பவள விழா குருபூசையை முன்னிட்டு காரைதீவு முதல் பனங்காடு வரையிலான சித்தர் ரதபவனி நேற்று முன் தினம் சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

75 ஆவது பவளவிழா அன்னதான நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நேற்று காலை 7.00 மணிக்கு காரைதீவு சித்தானைக்குட்டி ஆலயத்தில் இருந்து பூசைகள் சகிதம் ரதபவனி ஆரம்பமாகியது.

சுமார் 15 அலங்கரிக்கப்பட்ட உழவு இயந்திரங்களில் சித்தர்கள் இந்த ரதபவனியில் பங்கேற்றனர்.

ரதபவனி அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, கோளாவில் வழியாக பனங்காடு வரை பயணித்தது.

இதேவேளை அக்கரைப்பற்றில் சுமார் 500 பக்தர்களின் இந்த ரதபவனியுடன் இணைந்தனர்.

# தோப்பூரில் இரத்ததான முகாம்

திருமலை, ஜூலை. 06

"உதிரம் கொடுத்து உயிர்களை காப்போம்" எனும் தொனிப்பொருளின் கீழ் திருகோணமலை - தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் இரத்ததான முகாம் நேற்று இடம்பெற்றது. தோப்பூர் விஞ்ஞான பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கு சுகாதார சேவை திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்கியது. இரத்ததான முகாமில் அதிகளவான இளைஞர்கள், பொதுமக்கள் பங்கு கொண்டு இரத்ததான வழங்கியிருந்தனர். இரத்த வங்கியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு, தோப்பூர் விஞ்ஞான பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மூதூரில் டெங்கு ஒழிப்பு பணி

மூதூர், ஜூலை. 06

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக "கிளீன் சிறிலங்கா" வேலைத்திட்டத்தின் கீழ் பாரிய டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியொன்று திருகோணமலை மூதூரில் நடைபெற்றது.

மூதூர் மற்றும் தோப்பூர் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளின் நேரடி வழிகாட்டலின் கீழ் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் பொலிஸ் நிலைய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அர்ப்பணிப்புடன் டெங்கு இடங்களைத் துப்புரவு செய்தனர்.

இதன்போது, மூதூர் பொலிஸ் நிலையத்திலிருந்து மூதூர் நீதிமன்றம் வரையிலான பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள பகுதிகள் மற்றும் வடிகான்கள் அனைத்தும் முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்டன.

(அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 18ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா!

அம்பாறை, ஜூலை. 06

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 18ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஜூலை 25ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் ஒலுவிலில் உள்ள பல்கலைக்கழகத்தின் ஏ.ஆர் மன்சூர் ஞாபகார்த்த பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மூன்று நாள்களுக்கு நடைபெறும் இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களையும் உள்ளடக்கிய 3,398 பட்டதாரிகளுக்கு ஒன்பது தனித்தனி அமர்வுகளில் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

பல்கலைக்கழகத்தின்18ஆவது பட்டமளிப்பு விழா, உபவேந்தர் பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன் தலைமையிலும், வேந்தர் கலாநிதி பாயிஸ் முஸ்தபா, முன்னிலையிலும் நடைபெறவுள்ளது. விழாவின் நிர்வாக ஒருங்கிணைப்பை பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் மேற்கொள்கிறார்.

(அ)

# திருமலை இந்துக் கல்லூரி வெற்றி



திருமலை, ஜூலை. 06

திருகோணமலை இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரிக்கும் இடையிலான விவாத அரங்கு திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

செய்யறிவு மனித வாழ்வை மேம்படுத்துமா? மேம்படுத்தாதா? எனும் தலைப்பில் விவாதம் இரு மணி நேரம் இடம்பெற்றது.

மனிதர்களுடைய வாழ்வில் செய்யறிவு மனித வாழ்வில் தடையாக இருக்கும் என விவாதித்து நடுவர்களின் தீர்ப்பின் பிரகாரம் இந்துக் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றார்கள்.

இவர்களுக்கான பரிசினை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கலந்து கொண்டு வழங்கினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சிறை மோதல்...

மோதல் தீவிரமடைந்ததால், சிறையில் பதற்றமான சூழல் ஏற்பட்டது. வன்முறையாக நடந்துகொண்ட கைதிகள், சிறையில் உள்ள விசேட கைதிகளின் தடுப்புக் கூண்டுகளின் பூட்டுக்களை உடைத்து, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த விசேட கைதிகளைத் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், மற்றொரு கைதிகள் குழு, சிறையில் உள்ள மருந்தகத்திற்குள் புகுந்து, அங்கு இருந்த வலி நிவாரணிகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டு போதையேறும் நோக்கில் செயற்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, கலவரத் தடுப்புப் பிரிவு, விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பல குழுக்கள் சிறைக்குள்ளும் அதன் சுற்றுப்புறங்களிலும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (அ)

## சிறைக்குள் வெடித்தது...

30 கைதிகள் படுகாயமடைந்தனர் என சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்தன. அந்த 30 பேரில் கவலைக்கிடமான நிலையில் இருந்த இரண்டு கைதிகளே உயிரிழந்துள்ளனர்.

சிறைச்சாலையினுள் ஏற்பட்ட இந்த மோதலைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்ற நிலைமை உருவானது.

சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் உடனடியாகக் களம் இறங்கி, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்த மோதலில் காயமடைந்த 30 கைதிகளும் அவசரமாக நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இருவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்த நிலையில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் மூன்று பேர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்த ஏனைய 25 பேரும் தற்போது நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

மோதலுக்கான துல்லியமான காரணம் இன்னும் வெளியாகாத நிலையில், இச்சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சூழ்நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸின் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## கல்விச் சீர்திருத்தம்...

ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாடசாலையிலிருந்து வெளியேறி உலகிற்குச் செல்லும் ஒவ்வொரு பிள்ளைக்கும், அவர்களின் இயல்பான திறன்களுக்குப் பொருத்தமான மற்றும் தொழில் சந்தையில் அதிக தேவையைக் கொண்டுள்ள தொழிநுட்ப மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்குவதே இதன் கட்டாய இலக்காகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பலாங்கொடை வித்யாலோக மத்திய கல்லூரியின் புதிய மூன்று மாடி கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

## தயா கமகேவின்...

செயல்முறையைத் தொடர மக்கள் வங்கிக்கு சட்டபூர்வ உரிமை உள்ளது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஆர். குருசிங்க மற்றும் கலாநிதி சுமுது பிரேமச்சந்திர ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வு இந்தத் தீர்ப்பை அறிவித்ததுடன், மனுதாரர் நிறுவனங்கள் ஒரு மில்லியன் ரூபாவை நீதிமன்றக் கட்டணமாக செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

1.42 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிலுவையில் உள்ள கடன் வசதிகளை வசூலிப்பதற்காக, அடமானச் சொத்துக்களைப் பொது ஏலத்தில் விற்பனை செய்ய மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் குழு நிறைவேற்றிய தீர்மானத்தை ரத்து செய்யக் கோரி, மனுதாரர்கள் செர்டியோராரி, புரோஹிபிஷன் மற்றும் மொண்டாமுஸ் ஆணைகளைப் பிறப்பிக்குமாறு கோரியிருந்தனர்.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள், கொவிட்-19 பெருந்தொற்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அரசியல் ஸ்திரமின்மை உள்ளிட்ட, நாட்டில் ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தாங்கள் நிதிச் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும், இது கடன்களைத் திருப்பிச் செலுத்தும் தங்களின் திறனைக் கடுமையாகப் பாதித்துள்ளதாகவும் மனுதாரர்கள் நீதிமன்றத்தில் வாதிட்டனர்.

மேலும், மக்கள் வங்கி சட்டத்தின் கீழ் தனக்குள்ள அதிகாரங்களைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியதாகவும், அதிக மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி கடன் தொகையை நியாயமற்ற முறையில் அதிகரித்ததாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

கூடுதலாக, சட்டப்பூர்வமான கட்டாய அறிவிப்புகள் தங்களுக்கு முறையாக வழங்கப்படவில்லை என்றும், ஏலச் செயல்பாட்டில் நடைமுறைக் குறைபாடுகள் இருந்ததாகவும் அந்த நிறுவனம் வாதிட்டது.

இருப்பினும், மேல்முறையீட்டு நீதிமன்றம் மனுதாரர்களின் வாதங்களை நிராகரித்து, கடன் மீட்பு நடவடிக்கையைத் தொடர வங்கிக்கு முழு சட்டபூர்வ உரிமை உண்டு என்பதை வலியுறுத்தியது.

2021ஆம் ஆண்டின் மார்ச் 26ஆம் திகதி வங்கி தனது அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான முறையான தீர்மானத்தை நிறைவேற்றியிருந்த போதிலும், மனுதாரர்கள் இதுவரை தங்களின் நிலுவையில் உள்ள கடன்களை முழுமையாகத் தீர்க்கத் தவறிவிட்டனர் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

அதன்படி, நிலுவையில் உள்ள கடன் தொகையை வசூலிப்பதற்காக அடமானம் வைக்கப்பட்ட சொத்தை ஏலம் விடுவதற்கு மக்கள் வங்கிக்கு உரிமை உண்டு என்று நீதிபதி அமர்வு தீர்ப்பளித்தது.

கடன் மறுசீரமைப்புக்கு பல வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும், ஏலம் பலமுறை ஒத்திவைக்கப்பட்ட போதிலும், மனுதாரர்கள் தொடர்ந்து தங்கள் கடன் தவணைகளைச் செலுத்தத் தவறி வருவதாகக் கூறி, மக்கள் வங்கி இந்த மனுவை எதிர்த்தது உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி, தொடர்புடைய முன்மொழிவுகளை எதிர்த்து வழக்குத் தொடர, மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 29 இன் கீழ் எந்த சட்ட விதியும் இல்லை என்றும், எனவே இந்த மனுவை சட்டப்படி நிலைநிறுத்த முடியாது என்றும் வங்கி மேலும் சுட்டிக்காட்டியது.

தீர்ப்பை வாசித்த நீதிபதி பிரேமச்சந்திர, தொடர்புடைய ஏல முன்மொழிவு மார்ச் 2021 இல் நிறைவேற்றப்பட்ட போதிலும், இந்த ரிட் மனு, அது வெளியிடப்பட்டு ஒரு வருடம் மற்றும் எட்டு மாதங்களுக்கும் மேலான காலத்திற்குப் பிறகு, அதாவது நவம்பர் 2022 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்த வெளியீட்டுத் தாமதத்திற்கு மனுதாரர்கள் திருப்திகரமான காரணங்களை வழங்கத் தவறிவிட்டனர் என்றும், அவர்கள் தங்கள் உரிமைகளை உரிய நேரத்தில் பயன்படுத்தவில்லை மற்றும் பின்தொடரவில்லை என்றும் நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன் பிரகாரம் முன்னாள் அமைச்சர் தயா கமகேயின் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்து ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மக்கள் வங்கி முன்னெடுத்துள்ளது. (அ)

## அபிவிருத்தித் திட்ட...

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை போக்குவரத்து சபைக்கு மேலும் 800 பஸ்கள் இணைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் அதிவேக நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துதல், புதிய மருத்துவப் பீடங்களை நிறுவுதல் மற்றும் வீட்டு வசதித் திட்டங்களை உருவாக்குதல் போன்ற எதிர்காலத் திட்டங்களும் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிதிப் பற்றாக்குறை இல்லை என குறிப்பிட்ட அமைச்சர், காலாவதியான நிர்வாக நடைமுறைகளும், தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறையுமே சில திட்டங்களைத் தாமதப்படுத்துவதாகக் கூறினார். இதற்கமைய அடுத்த 3 ஆண்டுகளுக்குள் இதற்குத் தீர்வு காணப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட் டார். (அ)

## அரசியல் தலையீட்டு...

சேவையின் மனிதவள வினைத்திறனை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும், சேவை வழங்குதலின் செயல்திறன், தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கிலும், மேற்கு மாகாணத்தின் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள அரச மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்காக சுகாதார உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 627 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, முடிந்தவரை அதிகமானோரை சேவையில் சேர்க்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போதுள்ள வெற்றிட எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, ஏறத்தாழ 160,000 பேர் ஏற்கனவே பொதுச்சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில், சுகாதாரப் பணியாளர்கள், இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மற்றும் இரயில்வே திணைக்கள ஊழியர்கள் உள்ளிட்ட சேவைகளுக்கான ஆட்சேர்ப்புகள் பெரும்பாலும் அரசியல் தலையீட்டின் அடிப்படையிலேயே நடைபெற்றன.

சுகாதார அமைச்சில் அரசியல் தலையீடு மிகவும் வெளிப்படையாகத் வெளிப்படும் விடயமாக சுகாதாரப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பைக் குறிப்பிடலாம். தற்போதைய அரசாங்கம் அந்த முறையை முற்றிலுமாக மாற்றி, வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் தகுதிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆட்சேர்ப்பு செயன்முறையை நிறுவியுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது, இதற்காக, பகிரங்க விளம்பரங்கள் மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் சம வாய்ப்புகள் வழங்கும் முறை பின்பற்றப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 8 ஆம் திகதி செய்தித்தாள்களில் வெளியான விளம்பரத்தின் மூலமாக பெறப்பட்ட 91,473 விண்ணப்பங்களில், அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யாததால் 2,737 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மீதமுள்ள 88,736 தகுதியான விண்ணப்பதாரர்களிலிருந்து இந்த 2,737 விண்ணப்பங்களே முதல் தொகுதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆட்சேர்ப்பு, அரசியல் தலையீடு இன்றி, தகுதிகள் மற்றும் முறையான பரீட்சை நடைமுறைகளின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. அரச சேவையை அரசியல் செல்வாக்குகளிலிருந்து விடுவிப்பதற்காக தற்பாதைய அரசாங்கம் பின்பற்றும் கொள்கைக்கு இது ஒரு நடைமுறைச் சான்றாகக் கருதப்படலாம் - என்றார். (அ)

## புதிய பஸ்...

இதேவேளை, புதிய பஸ் கட்டணக் கணிப்பீட்டு முறைமை குறித்து இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 20 வருடங்களாக பயன்படுத்தப்பட்டு வந்த தூர அடிப்படையிலான கணிப்பீட்டு முறைமையிலிருந்து விலகி, தற்போதைய திருத்தத்தில் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## மன்னார் ரயில்...

இடையே தற்சமயம் ரயில் சேவைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. எனினும், அம்பேவலை மற்றும் பதுளை ஆகிய நிலையங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் வழமை போல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்டவாளங்களைச் சீரமைக்கும் பணிகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால், பயணிகள் தங்களது பயணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் அண்மைக்கால ரயில் சேவை நிலவரங்கள் குறித்து இலங்கை ரயில் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு உறுதிப்படுத்துமாறு இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

## பொருளாதார நெருக்கடி...

பின்னணியில் உள்ள நிர்வாக பலவீனங்கள் குறித்து நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டு பல்வேறு விடயங்களை தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

தாம் பதவியேற்றபோது, நாட்டின் நிதி நிலைமை குறித்த உண்மையான தகவல்கள் அப்போதைய ஜனாதிபதியிடமிருந்து கூட மறைக்கப்பட்டிருந்ததாகச் சுட்டிக்காட்டினார். 2022 ஏப்ரல் 8 அன்று மத்திய வங்கியின் ஆளுநராகத் தாம் பதவியேற்றபோது, நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு 25 மில்லியன் அமெரிக்க டொலர் என்ற மிகக் குறைந்த நிலைக்குச் சரிந்திருந்ததை அவர் நினைவு கூர்ந்தார்.

இருப்பினும், அதற்கடுத்த மாதத்தில் மட்டும் 6 பில்லியன் டொலர் கடன் தவணைகள் செலுத்தப்பட வேண்டியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“முந்தைய மத்திய வங்கி ஆளுநர்களும் நிதி அமைச்சர்களும் நாட்டின் உண்மையான நிலையை ஜனாதிபதிக்கோ அல்லது பாராளுமன்றத்திற்கோ தெரிவிக்கவில்லை. கடன்களை எந்தப் பிரச்சினையுமின்றி செலுத்திவிட முடியும் என்று அவர்கள் கூறிக்கொண்டிருந்தனர்.

ஆனால், உண்மையான நிதிநிலை மறைக்கப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் கடுமையான ஆபத்தில் இருந்தது” என்று ஆளுநர் கூறினார். கடன் செலுத்துதலைத் தற்காலிகமாக நிறுத்திவைத்த தனது முடிவு குறித்த எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த அவர், நாடு முழுமையாகச் சரிந்துவிடுவதைத் தடுப்பதற்கு அதுவே ஒரே வழியாக இருந்தது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

“கடன் வழங்குநர்களுக்குத் தெரிவித்த பின்னரே நாங்கள் இந்த முடிவை எடுத்தோம். நாங்கள் அவ்வாறு செய்யாமல் இருந்திருந்தால், நாடு “கடுமையான கடன் செலுத்தத் தவறிய” நிலைக்குள் வீழ்ந்து, சர்வதேச நிதி அமைப்பிலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும். அமைச்சரவையின் ஒப்புதலுடனும், பாராளுமன்றத்திற்குத் தெரிவித்தும் அந்த முடிவு எடுக்கப்பட்டது” என்று அவர் குறிப்பிட்டார்.

முந்தைய அதிகாரிகள் உண்மையை மறைத்து, கடனை அடைக்க முயன்றதன் மூலம் அத்தியாவசிய உணவு மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நாட்டின் நிதிகளை அழித்துவிட்டனர் என்று சுட்டிக்காட்டிய கலாநிதி நந்தலால் வீரசிங்க, அந்தத் தவறுகளைத் திருத்திக் கொண்டு வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட்டதாலேயே நாடு இன்று ஒரு குறிப்பிட்ட அளவிலான ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## கருணா அம்மானிடம்..

ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து வந்தாலும், அவர்கள் இருவருக்கும் இடையே நீண்ட கால பகை இருந்து வந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்கிடையில், பிள்ளையான் தரப்பினரால் பொலனறுவை, வெலிக்கந்தை பகுதியில் நடத்தப்பட்ட சித்திரவதை முகாம் தொடர்பிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பலரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளது. கொழும்பு நகருக்குள் அவர்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்த தரப்பினர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிடுகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


ஈழநாடு
Eelanadu

# காணிகளை விடுவிக்கக் கோரி 3ஆவது வாரமாகப் போராட்டம்!

### பலாலிச் சந்தியில் நேற்றும் மக்கள் கூடினர்

யாழ்ப்பாணம், ஜூலை. 06

பலாலி உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள தனியார் காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் மூன்றாவது வாரமாகவும் நேற்று தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



பலாலி சந்தியில் நேற்றுக் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது பூர்வீகக் காணிகளை மீள ஒப்படைக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தினர்.

போராட்டத்திற்கு மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் அமைப்பாளர் சட்டத்தரணி பவானி பொன்சேகா, இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் உள்ளிட்ட அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆதரவு தெரிவித்தனர்.

இதன்போது, சட்டத்தரணி பவானி பொன்சேகா போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டு, காணி உரிமைகள் தொடர்பான சட்ட ரீதியான விடயங்கள் குறித்து ஆராய்ந்தார்.

அதேவேளை, எம்.ஏ. சுமந்திரன், காணி விடுவிப்பு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளித்ததுடன், சட்டப் போராட்டத்தின் தற்போதைய நிலைமைகளையும் எடுத்துரைத்தார்.

நீண்ட காலமாக தீர்வு காணப்படாத காணி விடுவிப்பு பிரச்னைக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை போராட்டக்காரர்கள் மீண்டும் வலியுறுத்தினர். (அ)

## மக்கள் கொட்டகை அமைக்க அனுமதி மறுத்த பொலிஸார்!

யாழ்ப்பாணம், ஜூலை. 06

பலாலி உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள தனியார் காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் மூன்றாவது வாரமாகவும் நேற்று போராட்டம் நடத்திய வேளை, கடும் வெயிலில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்காக போராட்டக்காரர்கள் தற்காலிக கொட்டகை அமைக்க முயன்றபோது, பலாலி பொலிஸார் அதற்கு அனுமதி மறுத்தனர்.

வடக்கில் இவ்வாறு கொட்டகை அமைத்து போராட்டம் நடத்த அனுமதித்தால், தெற்கிலும் இதேபோன்ற போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்பதால் அனுமதி வழங்க முடியாது என பொலிஸார் தெரிவித்தனர் என போரா ட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர். (அ)

## கேப்பாபிலவில் காணிகளை விடுவிக்குமாறு படை முகாம் முன் போராட்டம் தொடர்கிறது!

முல்லைத்தீவு, ஜூலை. 06

முல்லைத்தீவு - கேப்பாபிலவுப் பகுதியில், இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம் நேற்று 12ஆவது நாளை எட்டியுள்ளது.

இதனை முன்னிட்டு, நேற்றுக் காலை கேப்பாபிலவு இராணுவ முகாமின் பிரதான வாயிலுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பின்னர், போராட்டக்காரர்கள் பேரணியாகச் சென்று, தொடர்ச்சியாக நடைபெற்று வரும் போராட்டப் பந்தலுக்கு முன்பாக போராட்டத்தை நிறைவு செய்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தங்களது பூர்வீகக் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்தினர்.

அத்துடன், மக்களின் பயன்பாட்டுக்காக இருந்த பாடசாலை, ஆலயம், தேவாலயம் மற்றும் பொதுமண்டபம் உள்ளிட்ட பொதுச் சொத்துகளும் இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை முழுமையாக விடுவித்து, இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்களது சொந்த கிராமங்களில் மீள்குடியேற அரசாங்கமும் ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

## இராணுவத்தின் தியாகத்தை எவரும் அவமதிக்கக்கூடாது!

### நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 06

இராணுவ வீரர்கள் பெற்றுள்ள பதக்கங்களை "ஒரு உலோகத் துண்டு" எனக் குறிப்பிடுவது, போர்வீரர்களின் தியாகத்தையும் சாதனைகளையும் அவமதிப்பதாகும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை, கொட்டப்பொல பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஆயுதப்படை உறுப்பினர்கள் பெற்றுள்ள பதக்கங்கள் அவர்களின் வீரம், தியாகம் மற்றும் நாட்டுக்கான சேவையை பிரதிபலிப்பவை என்பதால் அவை உரிய மரியாதையுடன் நடத்தப்படவேண்டும் - என்றார்.

தமது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு பெருமையுடன் காட்டும் பதக்கத்தை வெறும் "உலோகத் துண்டு" எனக் கூறுவது வெட்கக்கேடான விடயம் என்றும், இத்தகைய கருத்துக்கள் போர்வீரர்கள் செய்த தியாகங்களை புறக்கணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலையில், அரசாங்கம் போர்வீரர்களின் கௌரவத்தையும் மரியாதையையும் குறைத்து மதிப்பிட முயற்சிக்கிறதா என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

இதனுடன், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளையும் விமர்சித்த நாமல் ராஜபக்ஷ, விவசாயிகள், பட்டதாரிகள் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு அரசாங்கத்திடம் தீர்வு இல்லை என குற்றஞ்சாட்டினார். (அ)

## குறுக்குவழி அரசியலால் நாடு முன்னேறமுடியாது!

### கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

கொழும்பு, ஜூலை. 06



கடந்த 75 ஆண்டுகளாக அரசியல் தலைவர்கள் பல்வேறு குறுக்குவழி அணுகுமுறைகளைப் பின்பற்றியதன் விளைவாகவே நாடு இன்று பல சவால்களை எதிர்கொள்கிறது என்றும், "குறுக்குவழி அரசியலால் ஒரு நாடும் முன்னேற முடியாது" என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இலங்கை இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், தேசிய இளம் கத்தோலிக்க மாணவர் இயக்க தலைவர்கள், முன்னாள் மற்றும் தற்போதைய உறுப்பினர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இளைஞர்களின் ஆன்மீக, சமூக மற்றும் தலைமைத்துவ வளர்ச்சிக்காக கடந்த 75 ஆண்டுகளாக இயக்கம் ஆற்றி வரும் சேவையைப் பாராட்டும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை-

மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்து புதிய ஆட்சிக்கு வாக்களித்திருந்தாலும், மக்களின் நம்பிக்கையை வெல்வதற்கு நீதியும் நேர்மையும் இன்றியமையாதவை.

குறுக்குவழியில் வெற்றி இல்லை என்றும் தியாகமும் கடின உழைப்புமே உண்மையான முன்னேற்றத்தின் பாதை.

கடந்த 75 ஆண்டுகளாக அரசியல் தலைவர்கள் பல்வேறு குறுக்குவழி அணுகுமுறைகளைப் பின்பற்றியதன் விளைவாகவே நாடு இன்று பல சவால்களை எதிர்கொள்கிறது. குறுக்குவழி அரசியலால் ஒரு நாடும் முன்னேற முடியாது.

சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பரவும் எளிதான வெற்றிக்கான தவறான சிந்தனைகளில் சிக்காமல், ஒழுக்கம், பொறுப்புணர்வு மற்றும் கடின உழைப்புடன் எதிர்காலத்தை கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (அ)

## நாவாந்துறையில் வாள்வெட்டு மூன்று பேர் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், ஜூலை. 06

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த கும்பல் ஒன்று, நாவாந்துறைப் பகுதியில் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வீடொன்றினில் புகுந்து வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்த துணிகர வாள்வெட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

தாக்குதலில் காயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவாந்துறைப் பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை கிளிநொச்சியில் இருந்து பட்டா ரக வாகனத்தில் நாவாந்துறையில் உள்ள குறித்த வீட்டுக்கு வந்த கும்பல், தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

## தேசிய விபத்து தடுப்பு வாரம் இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை. 06

பொதுமக்களிடையே விபத்துத் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 11 ஆவது தேசிய விபத்துத் தடுப்பு வாரம் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

விபத்துக்கள் காரணமாக வருடாந்தம் ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் உயிர்கள் பறிபோவதையும், இலட்சக்கணக்கான மக்கள் காயங்கள் மற்றும் ஊனமுறுவதையும் கருத்திற்கொண்டு, பொதுமக்களிடையே விபத்துத் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, இன்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இந்த விபத்துத் தடுப்பு வாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டின் அரசாங்க வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களில் கணிசமான சதவீதமானோர் அனர்த்தங்கள் காரணமாகவே சிகிச்சை பெற்று வருவதுடன், அவற்றில் தவறி விழுதல், வீதி விபத்துக்கள், பணியிட விபத்துக்கள், நீரில் மூழ்குதல் முதன்மை பெற்றுள்ளன. சுகாதார சேவைக்கு மட்டுமன்றி, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கும் விபத்துக்களினால் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப விழா இன்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் அமைச்சின் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவு, தேசிய விபத்துத் தடுப்புக்கான ஆலோசனைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கமைக்கும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நாளும் ஒரு விசேட கருப்பொருளின் அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 06.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org